கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.466/2021

<u>தேதி : 19.06.2024</u>

<u>(வா.சா.–1) – திரு. வஜ்ரவேல்</u>

<u>சாட்சி அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>

<u>குறுக்கு விசாரணை : (பிரதிவாதி தரப்பில் )</u>

என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.3 உரிமை விடுதலை ஆவணத்தில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 கிரைய ஆவணங்கள் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2016 ஆம் ஆண்டு பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் கிடைத்த சொத்தும், வா.சா.ஆ.10–ல் உள்ள சொத்தும் ஒன்று தானா என்றால் ஒருகாலத்தில் ஒன்றாக இருந்த சொத்து தான். 11.02.1966 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் கொல்லைப்புறத்தைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, எங்களுக்குண்டான புழக்க உரிமை தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு செட்டில்மெண்ட் ஆவணத்திலும் கொல்லைப்புறத்தைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1966 ஆம் ஆண்டு கிரையம் பெற்ற அங்கம்மாள் இந்த பிரதிவாதியின் பாட்டி என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் பூர்வீகச் சொத்துக்கள் கிடையாது என்றால் பூர்வீகச் சொத்துக்களை உள்ளடக்கியது தான். பிரதிவாதி தரப்பில் அவரது பாட்டி வாங்கிய கிரையப் பத்திரத்திலும், செட்டில்மெண்ட் ஆவணத்திலும் கொல்லைப்புறத்தைப் பற்றி எதுவும் சொல்லப்படாததால் அது பொது சொத்து அல்ல என்றால் சரியல்ல, எங்களுக்குண்டான புழக்க உரிமை பற்றி அதில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. கழிப்பறை உள்ள இடத்திற்கு பிரதிவாதி தான் நகராட்சி வரி செலுத்தி வருகிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்களுக்கு கழிப்பறை கட்ட போதுமான இடம் இருந்தும், நான் பிரதிவாதிகளின் இடத்தை அபகரிக்க முயற்சிப்பதாகச்

சொன்னால் நாங்கள் குலதெய்வ வழிபாடு வீட்டில் செய்வதால் எங்கள் வீட்டில் அதற்கான இடம் இல்லை.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.06.25 16:07:22 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.